1970 மார்ச் 7]

தொழிற்சாலையாக மதுரையில் உள்ள அரசின் தொழிற்சாலைகள் (வசந்தநகர் சமீபம், கலெக்டர் அலுவலகம்) இரண்டையும் விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இந்த அலுவலகங்களை விரிவுபடுத்துவதற்கு எந்தச் செயற்குறிப்பும் இல்லை. எனினும், மதுரையில் டிராக்டர் தயாரிக்கும் பணிக்களரி ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொடக்க ஏற்பாடுகள் முடிவுற்று, இப்பணிக்களரி விரைவில் செயல்படும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதுரை நகரத்தில் இரண்டு அரசினர் தொழில் பேட்டைகள் இருந்தும், நமது பஞ்சாயத்து யூனியனில் சில டிராக்டர்கள், மருந்து அடிக்கும் கருவிகள் பழுது அடைந்தால், அவைகளைச் சரி செய்வதற்குத் தனியார் தொழிற்சாலைகளுக்குக் கொண்டுபோகவேண்டியுள்ளது. இதனால் வீண் கால தாமதமும், பண விரயமும் ஆகிறது. இந்தத் தொழிற்சாலைகளை துரிதமாக நல்ல முறையில் இயங்கும்படி அபிவிருத்தி செய்து விஸ்தரித்தால், பண விரயமும் குறையும், யூனியன் வேலைகளுக்கும், விவசாய வேலைகளுக்கும் உதவியாக இருக்கும். துரிதமாக இதை, நல்ல தொழிற்சாலையாக மாற்றுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏறத்தாழ எல்லா வேலைகளும் முடிவுற்று, விரைவிலே துவக்க விழா நடைபெறும்.

Dr. H. V. HANDE : Sir, while we are glad that there is a factory there, will the Hon. Minister be pleased to tell the number of persons employed in this factory and the number of persons likely to be employed? Because of the increased demand for tractors, may I know whether this Government have also taken into consideration the fact that the production of tractors in Tamil Nadu is very imperative to solve the employment problem of thousands of unemployed persons ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி இப்பொழுது இருக்கிற பணிக்களரிகளை விஸ்தரிக்க முடியுமா என்பது குறித்துதான். அதில் எத்தனை பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்பது பற்றிய குறிப்பு எதுவும் இப்பொழுது இங்கு இல்லை. தனிக்கேள்வி போட்டால், உரிய பதில் தரமுடியும்.

Fertiliser Inspectors.

* 255. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether the Government have any proposal to train block extension officers as fertiliser inspectors; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) வளர்ச்சி வட்டாரத்திலுள்ள வேளாண்மை வளர்ச்சி அதிகாரி, 1957-ம் ஆண்டு உரக்கட்டுப்பாட்டு ஆணையின் 19-வது பகுதியின் கீழ் நியமிக்கப்படும் உர இன்ஸ்பெக்டரும் ஆவார். அவர் வேளாண்மை வளர்ச்சி அதிகாரியாக முதற்கண் நியமிக்கப்பட்டபோது அவருக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ள பயிற்சியையும் வேளாண்மை இயக்குநர் அலுவலகத்துடன் இணைந்துள்ள மாவட்ட வேளாண்மை அதிகாரி (உரங்கள்) வளர்ச்சி வட்டாரங்களைப் பார்வையிடுவதற்காகச் சுற்றுப் பயணம் செய்யும் போதெல்லாம், அவர் வளர்ச்சி அதிகாரிக்கு மேலும் அளிக்கும் பயிற்சியையும் தவிர சிறப்பான பயிற்சி எதுவும் உர இன்ஸ்பெக்டருக்கு அளிப்பது குறித்த செயற்குறிப்பு எதுவுமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் விவசாய விஸ்தரிப்பு அதிகாரி என்று ஒருவர், கிராம சேவக் என்று ஒருவர் இருக்கிறார். இந்த இன்ஸ்பெக்டர்கள் சரிவர வேலை செய்வதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் நல்ல முறையில் செயல்பட ஏற்பாடுகள் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சாதாரணமாக இப்பொழுது உழவர்கள் நிலங்களுக்கு உரம் இடுவதன் அவசியத்தை நன்கு அறிந்திருக்கிறார்கள். துரிதமாக உரங்களை அவர்களுக்கு அளிப்பதற்காக இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு மேல் அதிகாரிகள் இருக்கிறார்கள், அந்த மேலதிகாரிகள் இவர்கள் வேலைகளை துரிதமாகச் செய்வதற்கான உரிய பயிற்சியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்தக் குறையுமின்றி அவர்கள் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா: குறிப்பாக கெமிகல் பர்டிலைஸர்ஸ், அந்த உரங்களைத் தான் கிராமப் பகுதிகளில் மிக அதிகமாகப் போட்டுவருகிறார்கள். அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இந்த உரங்களில் பலவிதமான கலப்புகள் இருக்கிற காரணத்தினால், இந்தக் கலவைகள் சரியான முறையில் கலக்கப்படாததினால், பயிர்களுக்குப் பூச்சி விழுகிறது என்று பெருவாரியாகப் பேசப்பட்டு வருகிறது. இது போன்ற நிலைமையைத் தடுக்க, இந்த இன்ஸ்பெக்டர்களுக்கு அரசாங்கம் கலவை இருக்கும் தன்மையை விளக்குவதற்கும் அறிவதற்கும் தனிப்பயிற்சி கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்த உர இன்ஸ்பெக்டர்கள் தகுந்த முறையில் உழவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உழவர்கள்தான் சரியான முறையில் இந்தக் கலவைகளை உபயோகப்படுத்தவில்லை என்ற

புகார் இருக்கிறது. எத்தனை சதவிகிதம் எந்த உரங்களைக் கலந்து போடவேண்டுமோ அப்படிப்பட்ட வகையிலே உழவர்கள் முழு அளவையையும் போடவில்லை, அதனால் தான் அதிகப்படியான விளைச்சல் காணவேண்டியிருந்தாலும், போதுமான உரம் சொல்லிக் கொடுக்கிற அளவுக்குப் போடாத காரணத்தினால், இன்னும் விளைச்சல் குறைவாக இருக்கிறது என்பதை அதிகாரிகள் அவ்வப்பொழுது அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொண்டு வருகிறார்கள்.

உணவுப் பொருள் வழங்குத்துறை

*256 வினா—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், உணவு, தானிய மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தக்கூடிய செயற்குறிப்பு ஏதாவது தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி சிவில் சப்ளை இலாகாவை எடுத்துவிட அரசு உத்தேசித்துள்ளதா என்பது. அதற்கு இல்லை என்று பதில் சொன்னேன். மூலக்கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

***257.** *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : **Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :**

(*a*) whether most of the staff of the Accountant General's Office working at the Office of the Commissioner of Civil Supplies have been withdrawn; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் அலுவலகத்தில் (கணக்குப்பிரிவில்) தமிழ்நாடு கணக்காய்வாளர் அலுவலகப் பணியாளர்களில் சிலர் முகமை அடிப்படையில் பணியாற்றி வந்தனர். அவர்கள் பதவிக்காலம் முடிந்தபின் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார். அகௌண்டெண்டு ஜெனரல் ஆபீசிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த சிப்பந்திகள் குறிப்பிட்ட காலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் என்ற ஒரு நியதியில் எடுத்துக்கொள்ளப்பட்டார்களா ? இல்லை, அவர்கள் இந்த டிபார்ட்மெண்டு இருக்கிற வரைக்கும் வேலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்பட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.